**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஸ்ரீரங்கம்,**

**முன்னிலை : திரு.K.விஜய் ராஜேஷ், எம்.,எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

2026 –ம் ஆண்டு ஜீலை திங்கள் 30–ஆம் நாள், வியாழக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 396/2019**

**CNR.NO.TNTP190027172019**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக ஸ்ரீரங்கம் குற்றப்பிரிவு காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்கள், குற்ற எண்.606/2013 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரிகள் :<br>1. திரு.கனகராஜ் (வயது 39)<br>த/பெ. மருதை<br>2. *** திரு. சின்னையன் (வயது 30) (died)<br>த/பெ. குமாரசாமி |
| குற்றப்பிரிவு | இ.த.ச. 392 of IPC |
| வனையப்பட்டது | இதச பிரிவு 392 of IPC |
| தண்டிக்கப்பட்டது | **எதிரி ஆஜர். திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.**<br>**இறுதியாக, அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 392 of IPC –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரியை குற்றவாளி இல்லையென முடிவு செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |
| தீர்மானம் | எதிரி குற்றவாளி இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.கனகராஜ் | திரு. மருதை | இந்து | கூலி | 296, பள்ளத்தெரு, பனையப்புரம், சூங்கரை, லால்குடி | 39 | – |
| 2 | *** திரு. சின்னையன் (Died) | திரு.குமார சாமி | இந்து | கூலி | 2, மல்லிகைபுரம், நடுகொண்டையம் பேட்டை, திருவானைக் கோவில், திருச்சி | 30 | |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 27.08.2013 |
| புகார் | : | 29.08.2013 |
| கைது தேதி | : | 08.10.2013, NBW Remand :– 18.03.2026 |
| பிணை விடுவிப்பு | : | 08.11.2017, NBW– Judicial custody to till date |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 14.09.2017 |
| விசாரணை முடிவு | : | 30.07.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | – |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 19.03.2015 |
| Date of Questioning | : | 20.09.2017 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PW's     Cross<br>1. 23.06.2026     23.06.2026<br>2. 23.06.2026     23.06.2026<br>3. 23.06.2026     23.06.2026<br>4. 03.07.2026     03.07.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 15.07.2026 |
| தலைமறைவு எதிரிகளின் | : | Nil |

| | | |
|---|---|---|
| விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | | |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 09.10.2019 ம் தேதியன்று பட்டிகை வழக்கு எண்.396/2019 கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 28.11.2025–இன்று விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. S.ஹரிஹரன்** அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

## தீர்ப்புரை

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:–**

கடந்த 27.08.2013 ம் தேதி பகல் சுமார் 03.45 மணியளவில் வாதி சுதா என்பவர் தனது வீட்டில் இருந்து மேல அடையவளஞ்சான் தெருவில் உள்ள தனது நாத்தனார் வீட்டிற்கு செல்வதற்காக மேலூர் ரோடு விஜய் பார்க் அருகில் நடந்து வந்து கொண்டிருந்த போது எதிரிகள் இருவரும் TN 36 Y 5886 என்ற எண் உள்ள Yamaha இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்த 1வது எதிரி வண்டியுடன் இருக்க, 2வது எதிரி வாதி கழுத்தில் அணிந்திருந்த 4 ½ பவுன் எடையுள்ள தாலிச் செயினை தனது சுயலாபம் கருதி தாலிச் செயினை பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாலிச் செயினை பறித்து சென்றுள்ளார் என்றும் எதிரிகளின் செய்கையானது பிரிவு 392 of IPC–ன் கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ளார்.

3. இவ்வழக்கின் இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து எதிரி மீது பிரிவு 392 of IPC –ன் கீழ் நடவடிக்கை தொடர போதிய முகாந்திரம் இருந்ததால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டு எதிரிக்கு போதிய அவகாசம் கொடுத்து எதிரி மீது பிரிவு 392 IPC–ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார்கள். அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை**:–

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா 4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :–

(1) **அ.சா.1 திருமதி. யுவராணி** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வந்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் விக்னேஷ் பரடேஸ் ஸ்ரீரங்கத்தில் தான் வேலை செய்து கொண்டிருந்தபோது ஸ்ரீரங்கம் காவல் நிலைய போலீசார் தன்னிடம் வந்து தான் வேலை செய்யும் இடத்திற்கு அருகில் திருட்டு நடந்திருப்பதாக சொல்லி தன்னிடம் கேட்டதாகவும், அப்போது தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், பார்வை மகஜரில் உள்ள் 2 வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும், அ.சா.1 சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

(2) **அ.சா.2 திரு. சங்கர்** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், 08.10.2013 அன்று காலை 09.30, 10.30 மணியளவில் தான் மாடு வாங்குவதற்காக கல்லணை ரோடு அருகில் உள்ள மாக்கமலையான்கோவில் அருகில் தானும் மற்றொரு நபரும் வந்துக்கொண்டிருந்தபோது அந்த இடத்தில் கும்பலாக இருந்ததால் சென்று பார்த்ததாகவும், போலீசார் செயினை பறித்ததாக சொல்லி விசாரணை செய்துக்கொண்டு இருந்ததாகவும், அப்போது தன்னிடம் போலீசார் கையொப்பம் பெற்றதாகவும், அந்த

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 என்றும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 என்றும், அ.சா.2 சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(3) அ.சா.3 **திரு. பத்மநாபன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், 08.10.2013 அன்று காலை 10.00 மணியளவில் தான் விஜய் அப்பார்ட்மெண்ட் அருகில் நின்றுக்கொண்டிருந்தபோது போலீசார் அந்த இடத்தில் வாகன சோதனை செய்துக்கொண்டு இருந்ததாகவும், அப்போது இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்ததாகவும், அந்த நபர்களை போலீசார் விசாரணை செய்தததாகவும், அப்போது அந்த நபர்கள் தப்பு செய்தததாகவும், அந்த நபர்களிடம் நகை இருப்பதாகவும் சொன்னார்கள் என்றும், மற்றொரு நபரின் பெயர் தெரியவில்லை என்றும், அந்த நபர்களின் வாகனங்களை போலீசார் சோதனை செய்ததாகவும், அந்த வண்டியையும், நகை 4 ½ பவுன் எடையுள்ள தாலி செயினையும் வாங்கி செல்வதாக சொல்லி தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 என்றும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.5 என்றும், அ.சா.3 சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(4) அ.சா.4 **திரு. சிவசுப்பிரமணியன்** தனது சாட்சியத்தில் தான் திருச்சி மாவட்டம் எடமலைபட்டிபுதுர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு ஸ்ரீரங்கம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் பொறுப்பு காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 29.08.2013–ம் தேதி காலை சுமார் 08.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பாண்டியன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது விக்னேஷ் பாரடைஸ் மேலூர் ரோடு, ஸ்ரீரங்கத்தை சார்ந்த ரகுநாதன் மனைவி நிலையம ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.606/2013 சட்டப்பிரிவு 392 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அந்த புகார் மனு அ.சா.ஆ.6 என்றும் , அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 என்றும், பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்தார் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தான் கடந்த 29.08.2013ம் தேதி காலை 09.30 மணிக்கு சம்பவ

இடம் சென்று சாட்சிகள் ராஜா, யுவராணி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் ஆவணம் அ.சா.ஆ.8 என்றும், அந்த வரைபடம் அ.சா.ஆ.9 என்றும், பின்னர் வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் கடந்த 08.10.2013 ம் தேதி காலை 10.00 மணிக்கு திருச்சி , ஸ்ரீரங்கம் கும்பகோனத்தான் சாலையும், திருவானைக்கோவில் மெயின் ரோடும் சந்திக்கும் இடத்தில் செயின் பறிப்பு வழக்கு சம்மந்தமாக பார்ட்டி சகிதம் வாகன தனிக்கையில் ஈடுப்பட்டிருந்தபோது எதிரிகள் கனகராஜ் , சின்னையன் TN-36 Y-5886 Yamaha இருசக்கர வாகனத்தில் வந்தவர்களை விசாரணை செய்தபோது அவர்கள் முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்தவர்களை கைது செய்து விசாரித்தபோது மேற்படி எதிரிகள் எந்தவித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இல்லாமல் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சங்கர் , பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில்பதிவு செய்தும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் பல்வேறு திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டது தொடர்பாகவும் ஸ்ரீரங்கம் விக்னேஷ் பாரடைஸ் மேலூர் ரோட்டைசார்ந்த ஒரு அம்மாவிடம் 4 ½ பவுன் தாலி செயின் பறித்தது சம்பந்தமாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த சுமார் 4 ½ பவுன் தாலி செயினையும் மற்றும் எதிரிகள் வழிபறிசம்பவத்திற்கு பயன்படுத்திய TN-36 Y-5886 Yamaha இருசக்கர வாகனத்தையும் சாட்சிகள் சங்கர் மற்றும் பத்மநாதன் ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரிகளை காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து நிலைய பாராவசம் ஒப்புவித்து உரிய சட்டநடைமுறைகளை பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜர் ஆவணம் அ.சா-ஆ 11.என்றும், பின்னர் வழக்கு சொத்துக்களான சுமார் 4 ½ பவுன் தாலி செயினையும் மற்றும் TN-36 Y-5886 Yamaha இருசக்கர வாகனத்தையும் படிவம்-91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவும், அந்த படிவம் -91 அ.சா.ஆ.12 என்றும், வழக்கு சொத்துக்களான சுமார் 4 ½ பவுன் தாலி செயினும் மற்றும் TN-36 Y-5886 Yamaha இருசக்கர வாகனம் அ.சா.பொ-1 மற்றும் அ.சா.பொ.2 என்றும், பின்னர் 08.10.2013 ம் தேதி வாதி வேதாவிடம் மறு வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் ரகுநாதன், சீனிவாசன், கிருஷ்ணமூர்த்தி, ராஜா, யுவராணி, சங்கர், பத்மநாபன் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் இவ்வழக்கில் தனது புலன்

விசாரணையை முடித்து  எதிரிகள் மீது  மேற்படி சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை  கடந்த 01.11.2013 ம்தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார்.

6. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு  பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரி அதை மறுத்துக் கூறினார் . எதிரி  தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரி  மீது இசத பிரிவு 392  of IPC ன் கீழ் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?  என்பதேயாகும்.

8. **தீர்வு** :–

I) கடந்த 27.08.2013 ம் தேதி பகல் சுமார் 03.45 மணியளவில் வாதி சுதா என்பவர் தனது வீட்டில் இருந்து மேல அடையவளஞ்சான் தெருவில் உள்ள தனது நாத்தனார் வீட்டிற்கு செல்வதற்காக மேலூர் ரோடு விஜய் பார்க் அருகில் நடந்து வந்து கொண்டிருந்த போது எதிரிகள் இருவரும் TN 36 Y 5886 என்ற எண் உள்ள Yamaha இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்த 1வது எதிரி வண்டியுடன்  இருக்க, 2வது எதிரி வாதி கழுத்தில் அணிந்திருந்த 4 ½ பவுன் எடையுள்ள தாலிச் செயினை தனது சுயலாபம் கருதி  தாலிச் செயினை பறிக்க  வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாலிச் செயினை பறித்து சென்றுள்ளார் என்றும் எதிரிகளின் செய்கையானது பிரிவு 392  of IPC– ன் கீழ் குற்றம்  என்பது அரசு  தரப்பு வழக்காகும்.

ii) அ.சா.4 இறுதியறிக்கை தாக்கல் செய்த விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்த்தபோது  இவ்வழக்கின் புகார் சாட்சியை  அரசு தரப்பு பட்டியல் சாட்சியில் சேர்க்கவில்லை என்பது இவ்வழக்கை பாதிப்பதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

மேலும் அதனை ஒத்துரைத்து அ.சா.1 தனது சாட்சியத்தில்  பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேலும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "  பார்வை மகஜரில் முதல் கையெழுத்து போட்ட நபரின் விவரம் பெயர், ஊர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர் கையெழுத்து செய்தபோது நான் உடனில்லை என்றால் சரிதான்.  " என்றும், சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக

பாவிக்கப்பட்டுள்ளார்.

iii) அ.சா.2 ஒப்புதல் வாக்குமூல சாட்சி மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி தனது விசாரணையில் கடந்த 08.10.2013 அன்று காலை 09.30, 10.30 மணியளவில் நான் மாடு வாங்குவதற்காக கல்லனை ரோடு அருகில் உள்ள மாக்கமலையான்கோவில் அருகில் நானும், மற்றொரு நபரும் வந்துக்கொண்டிருந்தபோது அந்த இடத்தில் கும்பலதாக இருந்ததால் சென்று பார்த்தோம், போலீசார் செயினை பறித்ததாக சொல்லி விசாணை செய்துக்கொண்டு இருந்தனர் என்றும், மேலும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் என்றும், சாட்சியம் அளித்து அரசு தரப்பு சாட்சியத்தை சார்ந்து சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

மேலும் அ.சா.3 ஒப்புதல் வாக்கும் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி தனது சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் என்றும்,சாட்சியம் அளித்து அரசு தரப்பு சாட்சியத்தை சார்ந்து சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

iv) அ.சா.4 விசாரணை அதிகாரி சாட்சியத்தில் கண்ணுற்ற சாட்சிகள் இல்லை என்பதாலும், சூழ்நிலை சாட்சியம் சம்பவத்தை நிரூபிக்கும் அளவில் சாட்சிகள் அமையாதால் எதிரிகளை குற்றவாளி இல்லையென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, அரசு தரப்பில் எதிரியானவர்கள் பிரிவு 392 of IPC–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தாகர்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

v)எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

vi) இவ்வழக்கின் வழக்கு சொத்தான RP.No.293/2013 சுமார் 4 ½ பவுன் எடையுள்ள தாலிச் செயின் ஒன்றை அதன் உரிமையாளர் நீதிமன்றத்தில் மனு செய்து

இடைகாலமாக பெற்று இருக்கிறார் என்றும், மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அவரே வைத்து கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேலும் Yamaha TN 36 Y – 5886 Motor Cycle ஒன்றை அதன் உரிமையாளர் உரிய முறையில் இந்நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அவரே வைத்து கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 30 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAIRAJESH K
Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.07.30 21:09:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

1. அ.சா.1 – திருமதி. யுவராணி
2. அ.சா.2 – திரு. சங்கர்
3. அ.சா.3 – திரு. பத்மநாபன்
4. அ.சா.4 – திரு. சிவசுப்பிரமணியன் ( காவல் ஆய்வாளர்)

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 23.06.2026 பார்வை மகஜரில் உள்ள அ.சா.1 ன் 2 வது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ. 2 : 23.06.2026 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2 ன் 1 வது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ. 3 : 23.06.2026 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.2 ன் 1 வது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ. 4 : 23.06.2026 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3 ன் 2 வது சாட்சி கையொப்பம் மட்டும்

அ.சா.ஆ. 5 : 23.06.2026 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.3 ன் 2 வது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ. 6 : 03.07.2026 புகார் மனு

அ.சா.ஆ. 7 : 03.07.2026 அச்சு முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ. 8 : 03.07.2026 பார்வை மகஜர் ஆவணம்

அ.சா.ஆ. 9 : 03.07.2026 மாதிரி வரைபடம்

அ.சா.ஆ. 10 : 03.07.2026 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ. 11 : 03.07.2026 கைப்பற்றுதல் மகஜர் ஆவணம்

அ.சா.ஆ.12 : 03.07.2026 படிவம் 91

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:–**உண்டு

1. அ.சா.பொ.1– சுமார் 4 ½ பவுன் தாலி செயின் ஒன்று

2. அ.சா.பொ.2 – TN 36 Y 5886 Yamaha இருசக்கர வாகனம்

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் :–** இல்லை

**எதிரிகள் தரப்பில் சான்றாவணம் :–** இல்லை

VIJAIRAJESH K

Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.07.30 21:09:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

குற்றவியல் நீதித்துறை நடுவர்

ஸ்ரீரங்கம்.